## காவிரி நடுவர் மன்றத்துக்கு புதிய நீதிபதி:

# மத்திய அரசை வற்புறுத்தி

# ட்டசபையில் தீர்மானம்

# கருணாநிதி அறிவிப்பு

"காவிரி நடுவர் மன்றத்துக்கு இம்மாத கடைசிக்குள் புதிய நீதிபதியை நியமிக்க வேண்டும்" என்று மத்திய அரசை முதல்-அமைச்சர் கருணாநிதி வற்புறுத்தி உள்ளார். அவ்வாறு நியமனம் செய்யப்படாவிட்டால், அடுத்த மாதம் சட்டசபையில் 'இது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றும் கருணாநிதி அறிவித்தார்.

சென்னை, ஜூலை 25-

காவிரி நடுவர் மன்ற தலைவராக இருந்த நீதிபதி சித்ததோஷ் முகர்ஜி சமீபத்தில் அந்த பதவியை ராஜினாமா செய்தார்.

அவருக்கு பதில் புதிய நடுவர் மன்ற தலைவர் இது வரை நியமிக்கப்பட வில்லை.

### சட்டசபையில்

தமிழக சட்டசபையில் நேற்று இந்த பிரச்சினை பிரதிபலித்தது. காவிரி நடுவர் மன்ற நீதிபதி முகர்ஜி விடுமுறையில் சென்று விட்டதால் புதிய நீதிபதியை நியமிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டும்" என்ற கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவரப் பட்டது.

உறுப்பினர்கள் டாக்டர் கிருஷ்ணசாமி (தேவேந் திரகுல வேளாளர் கூட்டமைப்பு), ஞானசேகரன் (த.மா.காங்.) ஆகியோர் கொண்டு வந்த இந்த தீர் மானத்துக்கு முதல்-அமைச்சர் கருணாநிதி பதில் அளித்தார்.

அவர் பேசியதாவது:-

### தீராத பிரச்சினை

காவிரி பிரச்சினை என்பது இன்று நேற்று அல்ல. நீண்ட காலமாக தமிழக அரசு, தி.மு.க. அரசாக இருந்தாலும் சரி, எம்.ஜி. ஆர். தலைமையில் நடந்த அ.இ. அ.தி.மு.க. அரசாக இருந்தாலும் சரி. இந்த பிரச்சினையில் ஒரே நிலைதான் கொண்டிருக்கிறது.

இதை நான் கூட சொல்ல வில்லை. எனது நண்பர் எம்.ஜி.ஆர். இந்த அவையில் அறிவித்து இருக்கிறார்.

தொடர்ந்து 27 தடவை பேச்சு நடந்து இதுவரை எந்த முடிவும் ஏற்படவில்லை. முடிவு நெருங்கி வந்த வேளையில் இந்த பிரச்சினையில் அந்த முடிவை பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டதை நாட்டு மக்கள் நன்கு அறிவார் கள்.

ஒவ்வொரு கட்டத்திலும் அனைத்துக்கட்சி தலைவர்களு டன் கூடி பேசிதான் எங்கள் ஆட்சியின்போது முடிவெடுக்கப் பட்டது.

### செல்வாக்கு

இங்கு எனது செல்வாக்கை பயன்படுத்தி கர்நாடகத்தில் இருந்து தண்ணீர் பெறவேண் டும் என்று உறுப்பினர் ஞானசேகரன் கூறினார். தமிழக அரசு இதில் செல்வாக்கை பயன்படுத்த முடியாது.

இந்த பிரச்சினையில் கர்நாடக அரசின் நிலைமை யையும் புரிந்து கொள்ள வேண்டும். இரு நாடுகளுக்கு இடையேயான பிரச்சினை அல்ல. ஒரு நாட்டில் உள்ள இரு மாநிலங்களுக்கு இடையேயான பிரச்சினை.

கர்நாடகத்தில் உள்ள தமிழர் கள் அவதிப்படக்கூடாது என்ற நிலையை ஆளும் கட்சியாக இருந்தபோதும் சரி, எதிர்க்கட்சி யாக இருந்தபோதும் சரி நாங்கள் மிக ஜாக்கிரதையாக உள்ளோம்.

### மத்திய அரசு

இந்த பிரச்சினையை நாங் கள் பூதாகரமாக ஆக்க முயல வில்லை. தஞ்சை, திருச்சி விவ சாயிகளின் இந்த பிரச்சி னையை கர்நாடக அரசு உணர வேண்டும். இதில் மத்திய அரசு தலையிடுவதில் தவறு இல்லை. எனவே தலையிட வேண்டும்.

உரிமையை விட்டுக் கொடுத்து விட்டு பேச்சுவார்த் தைக்கு போவதாக கூறி சிலர் அரசியல் ஆக்குகிறார்கள். நடுவர் மன்ற வரைமுறைக்கு உட்பட்டுதான் பேச்சுவார்த்தை என்று நான் கூறி உள்ளேன். ஆனால் "நடுவர் மன்றத்து உட்பட்ட" என்பதை விட்டு விட்டு வெறும் பேச்சுவார்த்தை என்பதை மட்டும் கூறி அரசியல் ஆக்குகிறார்கள்.

### பேசவேண்டிய முறையில்...

தி.மு.க. தலைவராக இருக்கும் கருணாநிதியும், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவராக இருக்கும் மூப்பனாரும் எல்லோரையும் விட இவர்கள் தஞ்சாவூர்காரர் கள் அதிக அக்கறை இருக்கும் என்பதை எல்லோரும் அறிவார் கள்.

நாங்கள் இருவரும் காவிரி பிரச்சினை தொடர்பாக பேச வேண்டிய இடத்தில் பேசவேண் டிய முறையில் பேசி உள்ளோம். உரிமைகளை விட்டுக்கொடுத்து விட்டு விவசாயிகளின் வாழ்வில் துயரத்தை உருவாக்கி வேடிக்கை பார்க்க ஒருபோதும் சம்மதிக்கமாட்டோம்.

### உருவாக காரணம்

காவிரி பிரச்சினையில் நடுவர் மன்றம் உருவாக காரணமாக இருந்தது. தி.மு.க. மத்தியில் தேசிய முன்னணி ஆட்சி இருந்தபோது நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

நடுவர் மன்றம் அமைக்கவேண்டும் என்று தஞ்சை விவசாயிகள் வழக்கு தொடர்ந்தபோது தமிழக அரசும் அதில் இணைத்துக்கொண்டு வழக்கு போட்டது. இந்த பிரச் சினையில் பேச்சுவார்த்தைக்கு இடம் இல்லையா என்று கோர்ட்டில் கேட்கப்பட்டது.

நான் பேச்சுவார்த்தைக்கு இடம் இல்லை என்று வி.பி.சிங்கிடம் தெரிவித்தேன். மேலும் பேச்சுவார்த்தைக்கு இடம் இல்லை. நடுவர் மன்றம் அமைப்பதுதான் ஒரே வழி என்று தீர்மானம் நிறைவேற்றி "பேக்ஸ்" மூலம் வி.பி.சிங்குக்கு அனுப்பி வைத்தோம். அதன் பிறகு நடுவர் மன்றத்தை வி.பி.சிங் அமைத்தார். இதற்கு அனைத்து கட்சி தலைவர்களும் காரணமாக இருந்தார்கள் என்பதை மறந்து விடமுடியாது.

### நீதிபதி நியமனம்

இன்று நடுவர் மன்றத்தில் தொய்வு ஏற்பட்டு உள்ளது. நடுவர் மன்ற நீதிபதியாக இருந்த முகர்ஜி பதவி விலகிவிட்டார். உடனடியாக அவரை அந்த பொறுப்பில் மத்திய அரசு நீடிக்க செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அல்லது அவருக்கு பதிலாக வேறு ஒருவரை நிய மிக்க வேண்டும்.

அப்போதுதான் நடுவர் மன்றத்தை பயன்படுத்த முடியும்.

### தீர்மானம்

காவிரி நடுவர் மன்றத்துக்கு புதிய நீதிபதியை ஜூலை மாதத் துக்குள் நியமிக்க வேண்டும். இல்லையேல் ஆகஸ்டு மாதத்தில் இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி டெல்லிக்கு அனுப் பலாம் என்று இருக்கிறேன்.

மேற்கண்டவாறு கருணா நிதி பேசினார்.